**Sub Court, Eraniel**

O.S. No.55/2024
Date: 11.02.2026.
PW1 - திருமதி. விஜயகுமாரி

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

1 மற்றும் 2 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எனது சொத்தின் புல எண்.138/3A மற்றும் 139/1. பிரதிவாதிகள் 1 மற்றும் 2 ஆகியோருடைய சொத்தின் புல எண்.139/1 மற்றும் 138/8 ஆகும். 138/3A சொத்திற்கு தெற்கு பக்கத்தில் புல எண்.138/8 சொத்து உள்ளது என்றால், சரிதான். அந்த இடத்தில் உள்ள பிரச்சனை என்பது 2 வது பிரதிவாதியின் வீட்டிற்கும் எனது வீட்டிற்கும் இடையே உள்ள இடம் தான் என்றால், சரிதான். அந்த இடம் என்னுடையது. புல எண்.138/3A ல் தென்கிழக்கு மற்றும் தென்மேற்கு மூலைகளில் தெளிவான எல்லைக் கற்கள் இல்லை என்றால், சரியல்ல. எல்லை கற்களை சரியாக அமைத்து தர வேண்டும் என்று நான் இந்த வழக்கில் பரிகாரம் கேட்டிருக்கிறேன். இந்த இரு வழக்குகளிலும், நீதிமன்ற ஆணையர் வழக்கு பட்டிகை சொத்திற்கு வந்து, நில அளவையரின் உதவியுடன் முறையாக அளந்தார்கள் என்றால், அவர் சரியாக அளக்கவில்லை. நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வரைபடம் மற்றும் அறிக்கை தவறு என்று எங்கள் தரப்பில் கூறியிருக்கிறோம். எங்கள் சொத்தை சர்வேயர்கள் மூலம் இதுவரை 4, 5 முறை அளந்திருக்கிறோம். அவ்வாறு அளந்த போதெல்லாம் சர்வேயர் கட்டணம் நான் செலுத்தியிருக்கிறேன். இந்த 4, 5 முறை அளவீடுகளில், 1 மற்றும் 2 பிரதிவாகளுக்கு அழைப்பு கொடுக்கப்பட்டது. ஆனால் அப்போது நிரந்தர எல்லை கற்கள் போடவில்லை. 1, 2 பிரதிவாதிகள் சொத்தை பஞ்சாயத்திற்கு கொடுத்தது போல நான் எனது சொத்தை பஞ்சாயத்திற்கு கொடுக்கவில்லை என்றால், சரிதான். 138/3A புல எண்ணை தாண்டி உள்ள இடத்தில் நான் எந்த உரிமையும் கேட்கவில்லை என்றால், சரிதான். புல எண்.139/1 ல் எனக்கு 2.500 சென்ட்கள் பாத்தியம். புல எண்.139/1 ல் 1 ம் பிரதிவாதிக்கு 7.500 சென்ட் பாத்தியம். எங்களுடைய இரு புல எண் சொத்துக்களும் இடையே பிரிவு எதுவும் இன்றி ஒன்றாக என் கைவசம் உள்ளது என்றால், சரிதான். எங்கள் கைவசம் உள்ள 139/1 புல எண்ணின் வடகிழக்கு மற்றும் தென்கிழக்கு மூலையில் பிரதிவாதிகள் காம்பவுண்ட் கட்டியிருக்கிறார்கள். அது தான் எல்கை. 2 ம் பிரதிவாதியின் கைவசம் உள்ள 138/8 சொத்தில் அவருடைய வீடு உள்ளது என்றால், சரிதான்.

1 மற்றும் 2 ம் பிரதிவாதிகள் அவர்களுடைய காம்பவுண்டுக்குள் இருக்கும் சொத்தினை பஞ்சாயத்திற்கு எழுதிக் கொடுக்கவில்லை என்றால், சரிதான். அவர்கள் பஞ்சாயத்திற்கு எழுதிக் கொடுத்த சொத்தில் என்னுடைய ரீசர்வே எண்.138/3A வை உட்படுத்த வில்லை என்றால், பழைய புல எண்.4538 ஐ உட்படுத்தி இருக்கிறார்கள். பழைய புல எண். 4538 ல் மொத்த விஸ்தீரணம் 77 சென்டிற்கு 82 சென்ட் கிடப்பு. 1 மற்றும் 2 ம் பிரதிவாதிகள் எனது குடும்ப உறுப்பினர்கள் கிடையாது என்றால், சரிதான் உறவினர்கள். 139/1 ன் பழைய சர்வே எண் எனக்குத் தெரியாது. பழைய சர்வே எண்.4538 ல் உள்ள மொத்த விஸ்தீரணமும் ரீசர்வே எண். 138/3A ல் உள்ளது. 138/3A ல் எனக்கு மொத்தம் 3.500 சென்ட்க்கு கரம் மற்றும் தீர்வை உள்ளது. 3.500 சென்ட் சொத்தும் எனக்கும் என் கணவருக்கும் 1245/2001 பாகப்பத்திரத்தின் படி பாத்தியம்.

(பிரதிவாதி தரப்பில் கேட்டுக் கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்,